புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஆகஸ்ட் (AUGUST) 06, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 33 • விலை(PRICE) ரூ.6.00

## வந்தே மாதரம் சட்டமாகியது

# இந்தியா – ‘இந்து’ இந்தியாவாகியது!

‘வந்தே மாதரம்’ பாடலுக்கு மிகுந்த சூழ்ச்சியுடன் ஒன்றிய பாஜக ஆட்சி சட்டபூர்வ ஏற்பை வழங்கிவிட்டது. டெல்லி ஜந்தர் மந்தரில் நடந்த போராட்டத்தில் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டிருந்ததை ஒரு வாய்ப்பாக ஒன்றிய ஆட்சி பயன்படுத்திக் கொண்டது. மாநிலங்களவையில் எந்த விவாதங்களும் இல்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லாத அவையில் (வெளிநடப்பு செய்திருந்தனர்) குரல் ஓட்டு வழியாக மசோதா நிறைவேறிவிட்டது. அதேபோல் மக்களவையிலும் வேறு பிரச்சனைகளை முன்வைத்து நடந்த அமளி துமளிகளை பயன்படுத்தி கடந்த ஜூன்–29, அன்று மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டது.

அமளிகளுக்கு இடையே திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்த எதிர்ப்பும், ஆ. ராசா தந்த திருத்தங்களும் புறந்தள்ளப்பட்டன. ‘வந்தே மாத’ரத்தின் முழுமையான பாடலுக்கும் இப்போது சட்டத்தால் ஏற்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் நிர்ணய சபையில் செய்த முடிவின்படி முதல் இரண்டு பத்திகளை மட்டுமே ஏற்க வேண்டும் என்பது ஆ.ராசா கொடுத்த திருத்தம்.

உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்தராய் அளித்த பதிலில் காங்கிரஸின் வாக்கு வங்கி அரசியலுக்காகவே ‘வந்தே மாதரம்’ பாடலுக்கு சட்ட ஏற்பு வழங்கவில்லை என்று குற்றம் சாட்டியிருந்தார். இதிலிருந்து ஒரு உண்மையை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இஸ்லாமியர்களை இப்பாடல் வெறுத்து ஒதுக்குகிறது என்பதுதான் அந்த உண்மை. இஸ்லாமியர்களைத் திருப்தி செய்யும் அரசியல் என்ற பெயரில் பாஜகவும் சங்பரிவாரங்களும் மதச்சார்பற்ற கட்சிகளைக் குற்றம் சாட்டி இஸ்லாமியர்களைத் தேச துரோகிகளாக அடையாளப்படுத்தி வருகிறார்கள். அந்த கருத்துக்கே இப்போது உள்துறை அமைச்சர் ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார். ‘வந்தே மாதரம்’ வரலாறும் இதைத் தான் கூறுகிறது.

1882–இல் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனரால் வங்க மற்றும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது இந்த ‘வந்தே மாதரம்’. அப்போது ஆட்சியிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் காலூன்ற முயற்சித்த காலகட்டம் அது.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்துவிட்டு, இந்து – ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே ‘வந்தே மாதரம்’.

“நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் – மதம் – பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; 7 கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்” என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து.

வந்தே மாதரம் பாடலைப் பாடி வைணவ இந்து இளைஞர்கள் முஸ்லிம்களை கொலைசெய்து, முஸ்லிம் பெண்களை ‘பாலியல் வல்லுறவுக்கு’ உள்ளாக்கி முற்றாக ஒழித்துவிட்டு, காளி தேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அப்போது கதாநாயகன் சத்யானந்தாவிடம், “நாம் தான் முஸ்லிம்களை அழித்து ஒழித்து விட்டோமே; இந்து இராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே ஆட்சி செய்கிறார்கள்?” என்று கேட்கிறார்கள். அதற்கு கதையின் நாயகன் சத்யானந்தா, “இப்போது நமக்கு எதிரிகளே இல்லை; ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை நம்முடைய விஷ்ணு கடவுளுக்குத் தான் காணிக்கையாக்கியிருக்கிறார்கள்” என்று பதில் கூறுகிறார்.

இப்படி இஸ்லாமியர் ஒழிப்பையும் ஆங்கிலேயர் ஆதரவையும் கொண்டாடுகிறது இந்த ‘வந்தே மாதரம்’.

1937–ல் சென்னை மாகாண சட்டமன்றத்தில் ‘வந்தே மாதரம்’ பாடப்பட்ட போது இஸ்லாமிய உறுப்பினர்கள் எழுந்து நிற்க மறுத்தார்கள். அப்போது குடிஅரசு பத்திரிக்கை ‘வந்தே மாதரம்’ பாடலை கடுமையாகக் கண்டித்து எழுதியது. இதற்கு எதிராக பெரியார் இயக்கம் தொடர்ந்து போராட்டங்களை நடத்தியது.

அரசியல் நிர்ணய சபை 1976–ஆம் ஆண்டு நிராகரித்தது போல் 42–வது அரசியல் சட்ட திருத்தமும் நிராகரித்தது. தேசியச் சின்ன அவமதிப்பிலும் ‘வந்தே மாதரம்’ இடம்பெறவில்லை. இப்போது இஸ்லாமியர்களுக்கு எதிரான ‘இந்து பயங்கரவாதத்தை’ அரசின் தேசிய கீதமாக்கி மதச்சார்பின்மை பிரிவையே புறந்தள்ளி இந்தியாவை ‘இந்து’ இந்தியவாக மாற்றிவிட்டது ஒன்றிய பாஜக ஆட்சி.

மதச்சார்பின்மை பேசும் எதிர்க்கட்சிகள் இதற்கு போதிய அழுத்தம் தராமல் ‘கட்சி அரசியலுக்கே’ முன்னுரிமை கொடுத்ததும் வரலாற்று அவலம்!

# இது மாற்றம் அல்ல; கண்டிக்கத்தக்க ஏமாற்றம்!

வேளாண் துறை அமைச்சர் வினோத் தமிழ்நாடு அரசின் வேளாண் பட்ஜெட்டை திருப்பதி ஏழுமலையான் முன் சமர்ப்பித்துள்ளார். பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் கூட இப்படி ஒரு கேவலம் நடந்ததாக தகவல் இல்லை!



சட்டமன்றத்தில் பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்கு பேரவைத் தலைவர் தான் அனுமதிக்க வேண்டும். ஆனால் இந்த ஆட்சியின் அமைச்சர் திருப்பதி ஏழுமலையானிடம் அனுமதி கேட்கிறார். ஏழுமலையான் பட்ஜெட் முழுவதையும் படித்துவிட்டு அதன் நிறை குறைகளை அலசுவார் என்று அமைச்சர் எதிர்பார்க்கிறாரா?

பட்ஜெட் என்ற அரசு ஆவணத்திற்கு மதம் கிடையாது; அது மக்களுக்கான ஆவணம். அனைத்து மதப் பிரிவு மக்களுக்கும் மத நம்பிக்கை அற்றவர்களுக்கும் தயாரிக்கப்படுகின்ற ஒரு அரசு ஆவணத்தை இந்து மத கடவுளுக்கு முன் சமர்ப்பித்து ஆசிர்வாதத்தையும் அனுமதியையும் கேட்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானது.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூட அயோத்தி ராமன் கோயில் முன் பட்ஜெட்டை சமர்ப்பிக்கவில்லை. துறையின் அமைச்சர் ஒரு இஸ்லாமியராக இருந்து அவர் பட்ஜெட்டை மசூதி முன்வைத்து அனுமதி கேட்டால் அனுமதிப்பார்களா? வாஸ்துப்படி முதல்வரின் அலுவலகம் பெரும் செலவில் மாற்றி அமைக்கப்படுவதும் முதலமைச்சரின் ஆஸ்தான சோதிடருக்கு அரசு பதவி கொடுக்க துடிப்பதும் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் நடந்ததே இல்லை! கடவுள் பெயரால் உறுதி ஏற்க மறுத்த ஆதவன் அர்ஜூனாக்கள் இதை ஆதரிக்கிறார்களா?

துறை சார்ந்த அமைச்சர்கள் மானிய கோரிக்கைகளில் சமர்ப்பிக்கும் அறிக்கைகளையும் இப்படி ஒவ்வொரு கோயிலுக்கும் குலதெய்வத்துக்கும் சென்று அனுமதி பெற்றுத் தான் சட்டசபையில் சமர்ப்பிக்கப் போகிறார்களா?

பேரவையில் சமர்ப்பிக்க தன்னிடம் அனுமதி பெற வேண்டிய ஒரு அமைச்சர் ஏழுமலையானிடம் சென்று முன்கூட்டி அனுமதி பெறுவதை பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்கிறாரா?

பெரியாரையும் அம்பேத்கரையும் கொள்கைத் தலைவராக ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கும் ஆட்சி இலட்சணம் இதுதானா?

கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் அமைச்சர்களும் இதை ஏற்கிறார்களா? இது மாற்றம் அல்ல ; மிகவும் கண்டிக்கத்தக்க ஏமாற்றம்!

**– விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு. 03.08.2026**

## சுயமரியாதைச் சுடரொளி வை.சு.சண்முகம் பெயரில் காரைக்குடி மாநாட்டு மேடை !

காரைக்குடியில் ஆக-12,ல் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் பயண நிறைவு விழா மாநாட்டின் மேடைக்கு சுயமரியாதைச் சுடரொளி வை.சு. சண்முகம் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. காரைக்குடி பகுதியில் செல்வவளம் மிக்க நகரத்து செட்டியார் சமூகத்தினர் வாழ்ந்த பகுதியில் சுயமரியாதைக் கொள்கைகளை முன்னெடுத்த பெரியாரின் உற்ற தோழராக விளங்கியவர் கானாடுகாத்தான் வை.சு.சண்முகம். ஜாதிக்குள் திருமணத்தையும் இந்துமத பார்ப்பனியத்தையும் எதிர்த்து நின்ற அந்த சுயமரியாதைச் சுடரொளி பெயரை மிகப் பொருத்தமாக மாநாட்டு அரங்கிற்கு சூட்டியுள்ளோம்.

முகவை மாவட்டம் கானாடுகாத்தானில், 1883ஆம் ஆண்டில் பிறந்த வை.சு. சண்முகம் அவர்கள். காங்கிரசில் இருந்தபோதே சேரன்மாதேவியில் நடந்த குருகுலப் போராட்டத்தில் பெரியாருக்கு பெரும் ஒத்துழைப்பு நல்கியவர். "பார்ப்பனரல்லாதார்" உணர்வு நிரம்பியவராகையால், வகுப்புரிமைக்கு பெரியார் சுயமரியாதை இயக்கம் அமைக்கையில் இவரும் உடன் தோழராய்த் தோள்கொடுக்க முன்வந்தார்.

இவரது நேர்மையும், ஆர்வமும், தகுதியும் உணர்ந்த சுயமரியாதைத் தலைவர்கள் செங்கற்பட்டு மாநாட்டிலேயே இயக்கத்தின் பொருளாளராகத் தேர்வு செய்தார்கள். நாட்டின் பல பகுதிகட்கும் சென்று பல்வகை நடவடிக்கைகளின் வாயிலாக இயக்கத்தை வளர்த்தார். ஜாதி மறுப்பு திருமணங்களையும், புரோகிதமற்ற திருமணங்களையும் நிறைய நடத்தியதுடன், தம் முதல் மனைவியார் மறைவுற்ற பின் கைம்பெண்ணாய் இருந்த மஞ்சுளாபாய் அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று, வழிகாட்டியாய் விளங்கினார்.

மரபுகளையும் வேண்டாத பழைய சடங்குகளையும் விடாப்பிடியாய்ப் பின்பற்றி வந்த செட்டிநாடு நகரத்தார் எனும் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரிடம் சுயமரியாதைக் கொள்கைகளை பரப்பினார். தனது மகள் பார்வதியின் திருமணம் 1935இல் நடந்தபோது வாழ்க்கைத் துணைவர் நடராசன் என்பார் கழுத்தில் மகளைவிட்டுத் 'தாலி' கட்டும் துணிச்சலான நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார்.

"நாட்டுக் கோட்டையாரும் சீர்திருத்தமும்" என்று 1930-இல் இவர் எழுதிய கட்டுரை பிரபலமானது. பெரியார் இயக்கத்தின் கொள்கை அறிமுக நூலாக போற்றப்படும் தயானந்த சரஸ்வதி எழுதிய “ஞான சூரியன்” எனும் அறிவுநூலை முதன் முதலாக வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இந்த நூலுக்கு அணிந்துரை எழுதினார்.

பெரியாருக்கு ஊர்தியொன்று தேவையாக இருந்த நிலையறிந்த சண்முகனார் தம் மதிப்புயர்ந்த 'கெடிலாக் மகிழுந்தினை பெரியாருக்கு வழங்கினார். இவ்வண்டியை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினையொட்டி அரசு பறிமுதல் செய்தது.

1961-ஆம் ஆண்டில் இவர் இயற்கையெய்தியபோதுகூட இவரது உறவினர்கள் இறுதி நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள முன்வரவில்லை! இயக்கத் தோழர்களே இவரது உடலுக்குச் சுடுகாட்டில் எரிமூட்டிக் கடமையாற்றினர். சுயஜாதிக்காரர்களை எதிர்த்த சுயஜாதிமறுப்பாளர் வை.சு.சண்முகம். இவரது பெயரை சூட்டி காரைக்குடி மாநாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளோம்.

இந்தப் பரப்புரை நோக்கத்தை பலரும் பாராட்டுகிறார்கள் வரவேற்று பேசுகிறார்கள். தோழர்கள் உற்சாகமாக களமிறங்கி செயல்படுகிறார்கள். பயணங்களில் பங்கேற்க வாய்ப்பில்லாத தோழர்கள் நிறைவு விழா மாநாட்டில் பங்கேற்குமாறு கழகம் அறைகூவி அழைக்கிறது.

## அதிகார ஆணவத்தின் உச்சம்!

கைது அடக்குமுறை அரசியலின் காலம் மலையேறிவிட்டது என்பதை முதல்வர் விஜய் உணர வேண்டும்! எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியது அவதூறு என்றால் அதற்காக வழக்கு ப்பதிவு செய்வதற்கு உரிமை உண்டு. ஆனால் வழக்குப் பதிவு செய்தவர்களை எல்லாம் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்ற அவசியம் என்ன வந்திருக்கிறது?

நாளை சட்டமன்றம் கூடும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சட்டமன்றத்தில் தனது கடமையை ஆற்ற விடாமல் தடுப்பது சட்டமன்ற ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைப்பது ஆகும்! உயர்நீதிமன்றம் அவசர வழக்காக இதை எடுத்துள்ள நிலையில் பகல் 12 மணி வரை கைது செய்ய தடை விதித்த நிலையில் நீதிமன்ற ஆணையையும் மீறி கைது செய்வது அப்பட்டமான பழிவாங்கும் அரசியல் அல்லாமல் வேறு என்ன?



நேற்று தஞ்சை ஆர்ப்பாட்டம் முடித்து வந்தவரை மீண்டும் காலையில் கைது செய்து தஞ்சை வரை வேனில் ஏற்றிச் சென்று பழிவாங்க வேண்டும் என்ற அற்ப அரசியலைத் தவிர இதற்கு வேறு ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இது ஒரு நல்ல காமெடி என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது. வழக்கு பதிவு செய்து விட்டதாலயே கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை; கைது செய்யவும் கூடாது என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளை வழங்கி இருக்கின்றன.

- ★ ஜோகிந்திர குமார் எதிர் உ.பி மாநில ஆட்சி -1994
- ★ சீதாராம் எதிர் மகாராஷ்டிரா- 2021
- ★ சத்தேர் குமார் எதிர் சி.பி.அய்- 2022
- ★ அம்னீஸ்குமார் எதிர் பீகார் அரசு

இப்படி பல வழக்குகளில் வழக்கு பதிவு செய்த உடனே கைது செய்வது கூடாது என்று உச்சநீதிமன்றம் தலையில் குட்டி இருக்கிறது.
ஏழு ஆண்டு தண்டனைக்குக் குறைவான குற்றப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்ட எவரையும் கைது செய்யக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி இருப்பதோடு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஓடி விடுவார்கள் என்று கருதினால் அதற்கான சான்றுகளைக் கூற வேண்டும் என்றும் நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

கரூரில் 42 அப்பாவி மக்கள் விஜய் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி மரணம் அடைந்தபோது முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் விஜயை நிச்சயமாக கைது செய்திருக்க முடியும். மரணம் நடந்த உடனேயே கரூரை விட்டு ஓடிப்போனவர் விஜய். ஆனால் அவர் பழிவாங்கும் அரசியலை நடத்த விரும்பவில்லை. மக்கள் இதை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஏதோ முதல்வர் விஜய் பகவானாக அவதாரம் எடுத்து வந்தவர் போலவும் அவரைப் பற்றி பேசுவது தேசத் துரோகம் என்பது போலவும் கதைகள் உருவாக்கப்படுகின்றன. இது அதிகார ஆணவத்தின் உச்சம் வன்மையான கண்டனத்துக்குரியது!

சொல்லப்போனால் திமுகவை மீண்டும் உணர்வுகளோடு உயிர்ப்பித்துக் களமாட இந்தக் கைதுகள் மேலும் ஊக்கத்தையும் உற்சாகத்தையுமே வழங்கும்.

## கருத்துரிமை பறிப்புகள் எல்லை மீறுகிறது!

திராவிடர் கழகம் நடத்தும் நீட் எதிர்ப்புப் பரப்புரை ஏன் தவெக ஆட்சியைப் பதற வைக்கிறது? நீட்டைத் திணிக்காதே என்று ஒன்றிய பாஜக ஆட்சிக்கு எதிராக பரப்புரைச் செய்வதை தனது ஆட்சிக்கு எதிரான பரப்புரையாக ஏன் இந்த ஆட்சி கருதுகிறது?

ஒன்றிய ஆட்சியுடன் அனுசரித்துப் போவது என்பது அவர்கள் திணிக்கும் கொள்கைகளோடு அனுசரித்தல் தானா?

கருத்துரிமை பறிப்புகள் எல்லை மீறுவது கண்டனத்துக்குரியது!

## சி.பி.எஸ்.இ பள்ளிகளில் 6102 சமஸ்கிருத ஆசிரியர்கள்

24,000 பேர் பேசும் சமஸ்கிருதத்தைக் கற்பிக்க 6,102 பார்ப்பன பண்டிதர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுள்ளனர். ஏழு கோடி பேர் பேசும் தமிழைக் கற்பிக்க 12 ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படுள்ளனர். மத்தியப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், ஒடிசா ஆகிய மாநிலங்களில் அனைத்து பள்ளிகளுக்கும் சமஸ்கிருத ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டாகிவிட்டது. இதுதான் பிரதமர் மோடி பெருமை பேசும் 'பிஎம் ஸ்ரீ' பள்ளியின் புள்ளிவிவரம்.

மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் ஒன்றிய கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்புயுள்ளார். பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் நாடு முழுக்க எத்தனை உள்ளன? அவற்றில் எத்தனை இந்தியல்லாத மொழிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்? என்று கேட்டிருந்தார்.

எழுப்பிய கேள்விகளுக்கு கல்வி இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி, இந்தியா முழுமையும் 14,500 பள்ளிகளைப் பி.எம்.ஸ்ரீ திட்டத்தின் கீழ் கொண்டுவர திட்டமிட்டுள்ளதாகவும், இதுவரை 13,092 பள்ளிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தி அல்லாத மொழிகளில் ஆசிரியர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கேட்டதற்கு, சமஸ்கிருத ஆசிரியர்கள் 6,102 பேரும், உருது ஆசிரியர்கள் 1,994 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாநில மொழிகளுக்கு 9,152 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பதிலில் சமஸ்கிருத ஆசிரியர்களே அதிக அளவில் 6,102 பேர் நியமிக்கப்பட்டு இருப்பது தெரிய வந்துள்ளது. மாநில மொழியாக இவர்கள் சமஸ்கிருதத்தை மட்டுமே ஏற்கிறார்கள் என்பதற்கு இதுவே சான்று. எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளிலேயே மிகக் குறைவான பேர் அதாவது 24,821 பேர் மட்டுமே அதாவது 0.002 சதவீதம் பேர் பேசுகிற சமஸ்கிருதத்திற்கு 6,102 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது சாக்குக்குள் ஒளிந்திருக்கும் பூனை சமஸ்கிருதம் என்பதைத் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளது. இரண்டாவது மொழியாக, மூன்றாவது மொழியாக சமஸ்கிருதத்தைப் பேசுபவர்களைச் சேர்த்தால் கூட ஒரு விழுக்காடு கூட வரவில்லை. கால் விழுக்காடே ஆகும்.

மத்தியப் பிரதேசத்தில், ராஜஸ்தானில், உத்தரப் பிரதேசத்தில் தமிழ் மூன்றாம் மொழியாக வரலாம் என்றெல்லாம் இங்கு கதைகளை அவிழ்த்து விட்டார்கள். ஆனால் சமஸ்கிருத ஆசிரியர்கள் மத்தியப் பிரதேசத்தில் 1,211 பேர். இது அங்குள்ள பள்ளிகளின் எண்ணிக்கையை விட அதிகம் (944 பள்ளிகள்). ஒரு பள்ளிக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சமஸ்கிருத ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பீகார், ஒடிசா போன்ற பாஜக ஆளும் மாநிலங்களின் பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் அனைத்திலும் சமஸ்கிருத ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

# வாழ்வியலை சிதைக்கும் மூடநம்பிக்கைகள் - (2)

## ஜோதிடம் அறிவியலா?

ஜோதிடம் ஓர் அறிவியல் என்று கதை விடுகிறார்கள். இவர்கள் கொடுக்கிற கணக்குகளைப் போட்டுப் பார்த்து கிடைக்கிற பலன்கள் சரியாக இல்லை என்றாலோ கணக்குப் போட்டவருக்கு -ஜோதிடருக்கு -'கடவுள் அருள்' இல்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். 'ஜோதிடமும் ஒரு விஞ்ஞானமே என்பது மக்களை ஏமாற்றி இதன்பால் இழுக்க சிலர் போடும் நாடகமே.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்று ஒன்பது கிரகங்கள் இருக்கின்றன. இவற்றின் சஞ்சாரத்தைக் கொண்டே ஜோதிடம் கணிக்கப்படுகிறது என்கிறார்கள்.

ஜோதிடத்தின் இந்த அஸ்திவாரமே அறிவியலுக்கு விரோதமானது. சூரியன் ஒரு கிரகமே (Planet) அல்ல. அது ஒரு நட்சத்திரம் (Star). நட்சத்திரம் என்றால் அது பிரதானமாக ஹைட்ரஜன் வாயுவால் ஆனது. ஒளியையும் வெப்பத்தையும் உருவாக்கவல்லது. ஒரு மாபெரும் அணு உலை என்று சூரியனைக் கூறலாம். இதனைச் சுற்றி செல்லும் கிரகங்கள் அப்படி அல்ல. இவற்றிற்கு சொந்தமாக ஒளியை உருவாக்கும் ஆற்றல் இல்லை. சூரிய ஒளியைத்தான் ஸ்பெஷல் நாடகப் பின்பாட்டுக்காரன் போல வாங்கி விடுகின்றன. கிரகங்கள் சுழன்று வருவதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கதிரவன் அநேகமாக ஓரிடத்திலேயே இருப்பது எனக் கூறலாம். அதாவது சூரியன்தான் மையம். அதைச் சுற்றித்தான் பல கிரகங்களும் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கின்றன.

இன்னொரு விஷயம் ஜோதிடத்தில் வரும் இந்த ஒன்பது கிரகங்களில் பூமி இல்லையே கவனித்தீர்களா? விஞ்ஞானத்தின்படி பூமியும் ஒரு கிரகமே. அதுவும் சூரியனைச் சுற்றியே வருகிறது. பிறகு ஏன் அதை நமது ஜோதிடசிகாமணிகள் சேர்க்கவில்லை? காரணம் அந்தக் காலத்தில் பூமிதான் மையம் என்றும், அதைச் சுற்றியே சூரியன் வலம் வருகிறது என்றும் மனிதன் நம்பினான், கண்ணில் கண்ட காட்சியே மெய் என்று நம்பினான். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்னும் ஞானம் அவனுக்குப் பின்னாளில் ஏற்பட்டது. தீர விசாரித்த பின் உண்மையைத் தெரிந்து கொண்டான். தற்பொழுது பள்ளிப் பாடப் புத்தகத்தில் சூரியமண்டலம் என்கிற குடும்பத்தில் சூரியனே தலைவன். அவனைச் சுற்றியே பூமி வலம் வருகிறது என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் ஜோதிட சாஸ்திரத்திலோ இன்னும் பூமிதான் மையம், அதைச் சுற்றி வரும் ஒரு கிரகம்தான் சூரியன்!

இன்னொரு வேடிக்கையை நோக்குங்கள். ஜோதிட சாஸ்திரத்தில் வரும் ஒன்பது கிரகங்களில் சந்திரனும் ஒன்று. ஆனால் உண்மையில் சூரியனை மட்டும் சுற்றி வரும் ஒரு கிரகம் அல்ல சந்திரன். மாறாக பூமியைச் சுற்றிவரும் ஒரு துணைக்கிரகம் (Satellite) அது.

ராகு, கேது என்று கிரகங்கள் உண்டு என்கிறார்கள் அல்லவா? அப்படி கிரகங்களே கிடையாது. என்ன செய்வார்கள் ஜோதிடர்கள்? ராகு கேதுக்கள் நிழல் கிரகங்கள் இவை பின்வந்த மகரிஷிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று கூறி சமாளிக்கிறார்கள். பின்வந்தவர்கள் ஏற்றுக் கொண்டார்களாம்! ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? அதற்கெல்லாம் காரணம் கேட்கக்கூடாது. பெரியவங்க தப்புச் செய்தால் அது பெருமாளே செய்தது போல.

> **ராகு, கேது என்று கிரகங்கள் உண்டு என்கிறார்கள் அல்லவா. அப்படி கிரகங்களே கிடையாது. ராகு கேதுக்கள் நிழல் கிரகங்கள் இவை பின்வந்த மகரிஷிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று கூறி சமாளிக்கிறார்கள்.**

பூமி, மெர்க்குரி (புதன்), வீனஸ் (வெள்ளி), மார்ஸ் (செவ்வாய்), ஜூபிடர் (வியாழன்), சாட்டர்ன் (சனி), யுரேனஸ் (விண்மம்), நெப்டியூன் (சேண்மம்) என்கிற எட்டு கிரகங்களே சூரியனைச் சுற்றிக் கொண்டிருப்பதாக முதலில் அறியப் பட்டது. 1930-ல் புளூட்டோ (சேணாகம்) என்கிற புதுக்கிரகம் கண்டுபிடிக்கப் பட்டது. 1987ல் மேலும் இரண்டு கிரகங்கள் கண்டறியப்பட்டதாக சில வானவியலார் அறிவித்தார்கள். இன்னும் அறியப்படாத கிரகங்கள் சூரியக் குடும்பத்தில் இருக்கக் கூடும் என்றே விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் 'யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் நமது ஜோதிட சாஸ்திரத்தில் சேர்க்கப்படவில்லை.

ஆக, இல்லாத கிரகங்களைச் சேர்த்தும், இருக்கிற கிரகங்களை விட்டு விட்டும் ஜோதிட சாஸ்திரம் வகுத்திருக்கிறார்கள். ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படையே கோளாறாக இருக்கிறது. இப்படி விஞ்ஞான விரோதச் சிந்தனையில் தயாரிக்கப்பட்ட ஜோதிடம் ஒரு விஞ்ஞானம்தானாம். இந்தக் கூத்தை என்னென்பது?.

## கிரகங்களின் நிலைக்கும் தனிமனித வாழ்வுக்கும் சம்பந்தம் உண்டா?

கிரகங்களைப் பற்றிய ஜோதிடர்களின் வருணனைகள் சுத்த ஏமாற்று வித்தைகள் என்றால் அவற்றையும் மனிதனின் பிறப்பையும் இணைக்கிறார்கள் பாருங்கள். அது இன்னும் பெரிய மோசடி! ஒரு குழந்தை பிறந்த நேரத்தில் கிரகங்கள் எந்தெந்த ராசியில் இருக்கின்றனவோ அந்த நிலை அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்று கதையளக்கிறார்கள். ஒரு வினா நெஞ்சில் எழக்கூடும். சூரிய மண்டலத்தில் கிரகங்கள் இருப்பது உண்மைதானே. அவை சூரியனைச் சுற்றி வருவதும் உண்மைதானே. ஒரு மனிதன் பிறக்கும்போது கிரகங்களானது சூரிய மண்டலத்தில் எந்த நிலையில் இருக்கிறதோ அது இந்த மனிதனைப் பாதிக்காதா?

கிரகங்கள் என்பவை ஏதோ பக்கத்து வீட்டில் அல்லது பக்கத்துத் தெருவில் இருப்பவை அல்ல. சூரியனிலிருந்து ஒவ்வொரு கிரகமும் பலகோடி கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றன. இவ்வளவு தூரத்தில் இருக்கக்கூடிய இந்தக் கிரகங்களின் சஞ்சாரம் எப்படி பூமியில் இருக்கக்கூடிய ஒரு தனிமனிதனின் வாழ்வைத் தீர்மானிக்கும் ? தீர்மானிக்க முடியும்? இதைவிட வேறு அபத்தம் இருக்க முடியாது, உண்மையில் இதர கிரகங்களின் நிலையினால் பூமிப் பந்தில் கூட திடீரென்று பெரிய அளவுக்கு மாறுதல்கள் ஏற்படுவதில்லை. பிறகு எப்படி ஒரு தனிமனிதனின் வாழ்வில் அவை புகுந்து வரும்?

## பிறந்த நேரம் கணிப்பது சரியா?

பிறந்த நேரத்தில் இருக்கும் கிரக நிலைமைக்கு ஏற்ப வாழ்வு தீர்மானிக்கப்படுகிறது என்றால் அந்த நேரத்தில் பிறந்த அனைவரின் வாழ்வும் ஒரே மாதிரியாக சற்றும் பிறழாமல் இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் பிறந்த இந்த 600 பேரின் வாழ்வும் ஒரே மாதிரியாக - இறப்பு உட்பட ஒரே மாதிரியாகஇருக்க வேண்டும் அல்லவா? அப்படித்தான் இருக்கிறதா? இருக்க முடியுமா? ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் பிறரிடமிருந்து ஏதாவதொரு சிறு வகையிலாயினும் வேறு பட்டிருக்கிறதே! பிறந்த நேரம் என்கிறார்கள் அல்லவா. அதை எப்படி கணிப்பது? இது மிகவும் முக்கியம். இது சரியில்லை என்றால் சகலமும் தவறாகப் போய்விடும். ஜோதிடம் என்பதே பிறந்த நேரத்தை நம்பியல்லவா இருக்கிறது. அட பிறந்த நேரம் என்பது தான் எது?

## பெரியார் கேட்கிறார்

> "பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து பிறக்கும் காலமா? அப்படிப் பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது ஒரு நாள் அரை நாள் அக்குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி, நிலத்தில்பட்டு, கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கும் காலமா? அல்லது கால், தலை ஆகிய எல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த காலமா? அல்லது மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த காலமா? - என்பனவாகிய கேள்விகள் ஒரு புறமிருக்க, ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக் கொண்டே பார்ப்போமானாலும் அந்த நேரத்தைச் சரியாக எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்? குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருடன் இருக்கிறதா இல்லையா. ஆணா பெண்ணா போன்றவைகளைப் பார்க்க சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டுவந்து வெளியிலிருக்கும் ஆண்களிடம் சொல்லச் சிறிது நேரமாவது செல்லும். அந்தச் சேதியைக் கேட்டவன் நேரத்தைக் குறிக்க அங்கேயே அவனுக்கு கடிகாரம் வேண்டும். அந்தக் கடிகாரம் சரியான மணி காட்டுவதா என்பது தெரியவேண்டும். கடிகாரம் இல்லாவிட்டால் வானத்தைப் பார்த்து நேரம் கண்டுபிடிப்பதாயிருந்தால் அதற்குப் பிடிக்கும் நேரம் முதலியவை அல்லது அக்கம்பக்கத்திலுள்ள கடிகாரம். அதுவுமில்லாவிட்டால் உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும் பிசகுகளும் எப்படி நேராமல் இருக்க முடியும்?"
>
> - பெரியார்

இன்னும் கொடுமை என்னவென்றால் பெண் ருதுவான நேரத்தை வைத்துக் கொண்டும் ஜாதகம் கணிக்கிறார்கள். பிறந்த நேரத்தைக் குறிப்பதிலேயே இவ்வளவு சிரமம் என்றால் இதிலே எவ்வளவு பிரச்சனைகள் இருக்கும் என்று புரிந்து கொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும் சரியான ஜனன, ருதுவான நேரத்தைக் கணக்கிடவே முடியாது என்று தெரிந்துதானோ என்னவோ பிறந்த தேதியை வைத்துக் கொண்டேகூட ஜாதகம் கணித்துத் தருகிறார்கள். அதேநாளில் உலகில் எத்தனை ஆயிரம் பேர் பிறந்திருப்பார்கள்! அவர்களது வாழ்வெல்லாம் எப்படி ஒரே மாதிரியாக இருக்கும்? இதைக்கூட யோசிக்காமல் அதற்கும் தட்சணை வழங்கி ஜாதகம் கணித்துக் கொண்டு போகிறார்களே!

பிறந்த அல்லது ருதுவான நேரத்தை வைத்து எந்தெந்த கிரகங்கள் எவ்வப்பொழுது இவனது/இவளது வாழ்வில் தலையிடும் என்று கணிக்கிறார்கள் அல்லவா? அதற்கு முன்கூட்டியே எந்தெந்த கிரகம் என்னென்ன பலன்களைத் தரும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். யார் தீர்மானித்தார்கள்? எப்படித் தீர்மானித்தார்கள்? என்றெல்லாம் கேட்கக்கூடாது. சொன்னால் கேட்டுக் கொண்டு போக வேண்டியதுதான். உதாரணமாக பிதா, ஆத்மா, சிரசு, தந்தம், வலது நேத்திரம், சிலும்பின மயிர், பித்தம், சரீரம், வைத்தியம், ஒரு தலை நோவு முதலிய சிரசு ரோகம், சுரம், வியாதீஸ்திரி அல்லது சித்த சுவாதீனமில்லாத ஸ்திரி, போகம், சௌரியம், பிரதாபம், தைரியம், இராஜசேவை, உத்தியோகம். சைவானுஷ்டானம், தபசு, சதாசிவன், பஞ்சலோகம், வச்சிரரத்தினம், இரசவாதம். யானை, கோதுமை, மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி, மலை, காடு, கிராம சஞ்சாரம் இவைகட்கெல்லாம் சூரியனே காரகன்' என்று எழுதி வைத்திருக்கிறார்கள். 'சிலும்பின மயிர்' யாருக்காகிலும் இருந்தால் அதற்குக் காரணம் 'சூரிய பகவானே' என்பதைத் தெரிந்திடுக! இப்படியாக இவர்களது ஒன்பது கிரகங்களுக்கும் பலன்கள் வகுத்திருக்கிறார்கள். கதைக்குக் கால் இல்லை என்று பாட்டிமார்கள் கூறுவதுபோல இதற்கும் ஆதாரம் ஏதும் கிடையாது.

## நல்லநேரம், ராகுகாலம் இருக்கிறதா?

நடைமுறையில் இந்த நல்ல நேரம் விவகாரம் முன்பு அளவுக்குக் கறாராகத் தற்காலத்தில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது ஓர் ஆறுதலான விஷயம். பெரியார் கூறினார்-

> "நல்ல நேரம், இராகு காலம், எமகண்டம் என்று பார்க்கிறார்களே இவர்களுக்குக் கோர்ட்டில் ஒரு கேஸ் விசாரணை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கு நல்ல கொழுத்த இராகு காலம் என்று சொல்லப்படும் நேரத்தில் அவன் 'இராமசாமி, இராமசாமி' என்று கூப்பிட்டால் இவன் இப்போது இராகு காலம், நான் வரமாட்டேன்' என்று கூறுவானா? துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு குடுகுடு என்று - எங்கே சீக்கிரம் போகாவிட்டால் வழக்கைத் தள்ளிவிடப் போகிறானோ என்று ஓடிப்போய் வந்தேன்' என்றுதானே கூறுவான். அப்பொழுது எங்கே போயிற்று இராகுகாலம்? எமகண்டத்திலே இரயிலும் பஸ்சும் புறப்படுகிறது. கொஞ்சம் இரு இப்பொழுது இராகுகாலம் என்று கூறினால் அது நிற்குமா அதில்தானே செல்கிறான்!"
>
> -பெரியார்

***(நன்றி: அருணன் எழுதிய 'மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை' நூலிருந்து சில பகுதிகள்..)***

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கழகப் பரப்புரைப் பயணம் மற்றும் காரைக்குடி நிறைவு மாநாடு – முன்னேற்பாட்டுக் குழு சந்திப்பு!

கழகத்தின் சார்பில் "ஜாதியில் திருமணம், மதத்தில் பார்ப்பனியம், வாழ்வில் மூடநம்பிக்கை - தடை! அதை உடை!" என்ற முழக்கத்துடன் பரப்புரைப் பயணம் நடைபெற உள்ளது. இப்பயணத்தின் நிறைவு மாநாடு வருகிற ஆகஸ்ட்-12 அன்று காரைக்குடியில் எழுச்சிகரமாக நடைபெற உள்ளது. மாநாட்டின் முன்னேற்பாடுகளைச் செய்யவும், களப்பணிகளில் உள்ள இடர்பாடுகளைக் களையவும் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி மற்றும் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன் ஆகியோர் தீவிரப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக இன்று காரைக்குடிக்கு வருகை தந்த அவர்கள், மாநாட்டுப் பணிகள் குறித்தும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் குறித்தும் கழகத் தோழர்களுடன் விரிவாகக் கலந்துரையாடினர்.





மேலும், பல்வேறு தோழர்களை நேரில் சந்தித்து மாநாட்டுக்கான அழைப்பிதழ்களையும் வழங்கினர். தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு மாவட்டச் செயலாளர் வேணுகோபால் (காரைக்குடி) அவர்களுக்கு மாநாட்டு அழைப்பிதழ் வழங்கப்பட்டது. நாகர்கோயில் மாநகராட்சியின் மேனாள் மேயர், திமுக மாவட்டச் செயலாளர் ஆர். மகேஷ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பயணக்குழுவிற்கு தேவையான உதவிகளைச் செய்வதாக அவர் தெரிவித்தார்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரைச் சந்தித்து மாநாட்டு அழைப்பிதழ் வழங்கச் சென்றனர். அடிகளார் வெளியூர் பயணத்தில் இருப்பதால், மடத்தின் பொறுப்பாளர்களிடம் அழைப்பிதழை வழங்கினர்.

# கழகத் தோழர் இலக்கம்பட்டி குமார் விடைபெற்றார்!

சேலம் மாவட்டம், கொளத்தூர் , இலக்கம்பட்டி கழகத் தோழர் குமார் (52) 01.08.2026 அன்று மாலை 6.00 மணியளவில் மறைவுற்றார். தோழரின் இறுதி நிகழ்வு 02.08.2026 காலை 10.00 மணிக்கு இலக்கம்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த தோழரின் உடலுக்கு சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கணக்கான தோழர்கள் அணிவகுத்து கழகக் கொடி மற்றும் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. கழகப் பெண் தோழர்களே குமார் அவர்களின் உடலைச் சுமந்து இறுதி ஊர்வலத்தை தலைமை ஏற்று நடத்தினர். இறுதி நிகழ்வை சடங்கு, சம்பிரதாயங்கள் இன்றி நடத்த தோழரின் குடும்பத்தார் முழு ஒத்துழைப்பு வழங்கினர். கழகத் தலைமைக்குழு உறுப்பினராக செயல்பட்டவர் தோழர் குமார்.



நிகழ்வில் கொளத்தூர், காவலாண்டியூர், மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ், சேலம் மாநகரம், நங்கவள்ளி, வனவாசி, இளம்பிள்ளை, ஏற்காடு, திருப்பூர், குருவரெட்டியூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கழகத் தோழர்கள் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் உறவினர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரங்கல் அறிக்கை:

அவருடைய பெற்றோர்கள் இருவரும் சென்னையில் 1972 மே 27, 28 ஆகிய நாட்களில் நடந்த மாநில பகுத்தறிவாளர் மாநாடு, சமூக இழிவு ஒழிப்பு மாநாடு, மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடுகள் முதல், திராவிடர் கழகத்தின் அனைத்து மாநாடுகளிலும் பங்கேற்றவர்கள். அவரது தந்தை தோழர் மு. அர்த்தனாரியோ மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிலும், பின்னர் நடந்த டெல்லி போராட்டத்திலும் பங்கேற்றவர். அவரது தாயார் சந்திராவும் தாலி, நகைகள் அணியாத கழகக் கொள்கைப் பற்றாளராகவே வாழ்ந்து வருபவர் ஆவார். தமிழீழ விடுதலைப்புலிகள் பயிற்சி முகாமுக்கு இடம் தேடியபோது அவர்கள் வசித்து வந்த நிலம் காடுகளுக்கு அருகில் இருந்ததாலும், மற்றொரு நிலம் காவிரி ஆற்றின் கரையில் (மேட்டூர் தேக்கத்தின் பின்புறத்தில்) இருந்ததாலும் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன் பின்னர் தான்இடமாற்றம் நிகழ்ந்தது.

அவரது தந்தை தன் மகனுக்கு ஜாதி மறுப்புத் திருமணமே செய்வது என்பதில் உறுதியாக இருந்தவர். அவ்வாறே திராவிடர் கழகத்தின் மேச்சேரி ஒன்றியத் தலைவராக இருந்து, தோழர் மேச்சேரி கோபால் முடிவெய்திய பின்னர் அவரது மகள் கோ. தமிழரசியுடன் நடத்தியும் வைத்தார். அந்தத் திருமணத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் தேதி கிடைக்காத காரணத்தால், மணமக்களின் இரு குடும்பத்தாரும் ஒற்றைப் பேருந்தில் பயணத்து, பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் அரங்கில் நிகழ்த்திக் கொண்டனர். வழங்கப்பட்ட இனிப்பும். காரமும் வீட்டிலேயே செய்து எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு வாங்கிய தேநீர் விருந்தோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது. ஆசிரியர் அவர்கள் பாராட்டிப் பேசிய ஒரு விழாவாகவும் அது இருந்தது. மீதமான மணவிழாச் செலவை கழகத்துக்கு நன்கொடையாகவும் வழங்கினார் அவருடைய தந்தையார். தோழர் குமாரும் தொடக்கத்தில் தன் கல்லூரி நாட்களில் ஈரோடு மாவட்ட மாணவரணிச் செயலாளராகப் பணியாற்றியவர். பின்னர் திராவிடர் கழக மாநில மாணவரணிச் செயலாளராக திண்டுக்கல் தோழர் தி. தாமரைக்கண்ணனும் இவரும் நியமிக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகளில் தாமரைக்கண்ணன் தன்னை திராவிடர் கழகத்திலிருந்து விடுவித்துக் கொண்டதன் பின்னர், தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்படும் வரை திராவிடர் கழக மாநில மாணவரணிச் செயலாளராக நான்காண்டு காலத்துக்கு மேலாகப் பணியாற்றி வந்தார். அவர் விளிம்பு நிலை மக்களிடம் கொண்டு இருந்த ஈடுபாடு காரணமாக அவரது ஆய்வியல் அறிஞர் (M.Phil.,) ஆய்வு பழங்குடி மக்களை குறித்ததாகவே இருந்தது.

அவரது தந்தைக்கு நிகழ்ந்த இதய அறுவை சிகிச்சையின் காரணமாக முழுவீச்சில் ஈடுபட முடியாமல் உள்ளூர் அளவில் அவரது கழகப் பணி குறுக நேர்ந்தது. தன் மகன் த.கு.இனியனை வில்வித்தைப் பயிற்சியில் ஈடுபடுத்தி தேசிய அளவிலான முதல் இடம் பெறும் அளவு வளர்த்தெடுத்தார். அவரது முன்னெடுப்பே கொளத்தூர் பகுதி கழகக் குடும்பங்களிலும் பலர் அந்தத் துறையில் வளர்ந்து மாநில அளவிலான வெற்றிகளையும், இந்திய அளவிலான போட்டிகளில் பங்கேற்பும் நிகழச் செய்தது. அப்போட்டிகள் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரி விழாவில் அனைத்திந்திய அளவிலான போட்டிகளாக ஆண்டுதோறும் நடைபெறும். தமிழ்நாடு வில்வித்தைப் பயிற்சியாளர் சங்க செயலாளராக அப்போட்டியின் முன்னேற்பாடுகளுக்காக ஒரு நாள் முன்னதாகவே சென்று போட்டி ஒழுங்குகளில் ஈடுபட்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட மயக்கத்தின் காரணமாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றபோதுகூட மருத்துவமனைக்குள் நடந்தே உள்நுழைந்த தோழர் குமார் மருத்துவம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே உயிரிழந்தார். முதன் முறையாய் ஏற்பட்ட மாரடைப்பு அவரது மரணத்தில் முடிந்த நிகழ்வு அவரை அறிந்த அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

# பரப்புரைப் பயண பாடல் வெளியீடு!

ஜாதி மற்றும் மூடநம்பிக்கைக்கு எதிரான பாடல் வெளியீட்டு விழா, ஜூலை-31, மாலை 6 மணிக்கு சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.





இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார், திரைப்படங்களின் மூலம் பரப்பப்படும் புராணக்கதைகளை கண்டித்து உரையாற்றினார். "வெங்காயம்" திரைப்பட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

நிறைவாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பாடல்வரிகளை வெகுவாகப் பாராட்டினார். இதுபோல் இன்னும் நிறைய பாடல்களை உருவாக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். கழகப் பரப்புரைப் பயணத்தில் தோழர்கள் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகளையும் பொறுப்புகளையும் விளக்கினார்.

பாடல் உருவாக்கத்தில் ஈடுபட்ட இசையமைப்பாளர் வசந்த ரமேஷ், பாடலாசிரியர்கள் மற்றும் பாடகர்கள் சத்யா, லதா, குரல் கொடுத்த இரா. உமாபதி, இரண்யா ஆகியோருக்கும், வீடியோ உருவாக்கத்தில் ஈடுபட்ட தோழர்கள் அருண் கோமதி, குகன் ஆகியோருக்கும் சிறப்பு செய்யப்பட்டது. U2BRUTUS மைனர் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்று பாடல்களை வரவேற்றனர்.

# வைகறைவாணன் விடைபெற்றார்!

தோழர் வைகறை வாணன் (77) முடிவெய்தினார். பெரியாரிய பொதுவுடமை சிந்தனை கொண்டவர். ஈழ விடுதலைப் பிரச்சனையில் முனைப்புடன் செயல்பட்டவர்.



குத்தூசி குருசாமி எழுத்துக்களையும், தர்ம தீர்த்த அடிகளார் மலையாளத்தில் எழுதிய நூலை தமிழாக்கம் செய்து "இந்து மத கொடுங்கோன்மை வரலாறு" என்ற நூலையும் தனது சாளரம் பதிப்பகம் வழியாக வெளியிட்டவர். அவர் நடத்திய 'பாலம்' இதழ் வழியாக ஈழத்துக் கவிஞர்கள், கவிதைகள், நாவல்களை வெளியிட்டு பதிப்பித்தவர்.

விடுதலைப் புலிகளின் கவிஞரான புதுவை ரத்தினதுரை கவிதைகளை தொகுத்து வெளியிடும் முயற்சிகளில் முனைப்புடன் இருந்தார். இந்த நிலையில் உடல்நலன் பாதிக்கப்பட்டு விடை பெற்றுக் கொண்டு விட்டார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 06,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran